செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.08.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : யூலை 2018

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2018 யூலை மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் திருமதி இந்து பண்டார அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 3.4% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 யூன் மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 2.5% ஆக இருந்தது. 2018 யூலை மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 1.09%, 2.31% ஆக இருந்த அதேவேளை, 6.3% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 யூலை மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 3.7%, 2.6% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 யூன் மாதத்தில் பதிவாகிய 126.5 இருந்து 2018 யூலை மாதத்தில் 126.6 ஆக அதிகரித்துள்ளது. இது, 2018 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 யூலை மாதத்தில் 0.1 சுட்டெண் புள்ளி அதாவது 0.01 சதவீத புள்ளி அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.07%ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.08% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், அரிசி, எலுமிச்சம்பழம், மரக்கறி, சீனி, சின்ன வெங்காயம், வெள்ளைப்பூடு, கடலை, மைசூர் பருப்பு மற்றும் மிளகு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதி பச்சை மிளகாய், புதிய மீன், முட்டை, கருவாடு, பப்பாசிப்பழம், வாழைப்பழம், பால்மா, பெரிய வெங்காயம், குழந்தைப் பால்மா, உருளைக்கிழங்கு, அண்ணாசிப்பழம் மற்றும் மாம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 யூலை மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘போக்குவரத்து’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘உணவகமும் ஹோட்டல்களும்’, ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘ஆடையும் காலணியும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். இருப்பினும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் குறைவு பதிவாகியது. எல்.பி.(LP)எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட குறைவே ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ பிரிவு பொருட்டான செலவுப் பெறுமதியில் குறைவுக்கு பிரதான காரணமாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘தொடர்பாடல்’ பிரிவில் செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. அதேநேரம், ‘சுகாதாரம்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்